நான் எதற்குச் சொல்ல வருகிறேன் என்றால், இருக்கின்ற நிலைமையை மேலும் சீர்ப்படுத்த, செம்மைப்படுத்த உங்களுடைய மேலான ஆலோசனைகள் இருக்குமேயானால் அவைகள் பயன்படும் என்று எடுத்துச் சொல்லி இங்கு மாண்புமிகு உறுப்பினர்கள் பல பேரும் பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொன்னபோது, அந்தந்தத் துறையைச் சார்ந்த மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் அவற்றையெல்லாம் கவனத்திலே வைத்து, நாடு வாழ, மக்கள் வாழ, மக்களுடைய நிலைமைகள் உயர, அவர்களுடைய வாழ்க்கைத் தரம் உயர, அவர்களுடைய வசதி வாய்ப்புகள் பெருக என்னென்ன திட்டங்களைச் செய்ய வேண்டுமோ அவைகளைச் செய்வார்கள். இந்த அரசு செய்யும். தொடர்ந்தும் செய்யும் (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குப் பிறகும் செய்யும். அதற்கு உங்கள் அத்தனை பேருடைய முழு ஒத்துழைப்பையும் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக அரசு எல்லோருக்கும் சொந்தமானது. நேற்று சொன்ன மாதிரி இந்திய அரசு எல்லோருக்கும் சொந்தமானது. எல்லோரும் சேர்ந்து வாழ வேண்டும். மேலே ஏறுகிறவனைப் பிடித்து மட்டும் கீழே இழுக்க வேண்டாம் என்று சொல்லி, ஆதரவு தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கின்றேன். வணக்கம்.

பிற்பகல் 1-30

3. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(உ) முன்பண மானியக் கோரிக்கைகள், 1996-97 மொழிதல்-(ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு: 1996-97 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப்பெற்றுள்ளது:

``In pursuance of clasue (2) of Article 206, read with clause (3) of Article 203 of the Constitution of India, I, M. Channa Reddy, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving in the Tamil Nadu Legislative Assembly of the demands for grants in advance, during the financial year 1996-97."